# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 1 | ஜனவரி – 2019 | ₹1.00

## துணைவேந்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

**அன்புள்ள வாசகர்களே!**

**என் இனிய, வளமான புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை** உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி, முன்னேற்றம், அமைதி மற்றும் நல்ல உடல் ஆரோக்கியத்தை வழங்கட்டும்.

'நமது பல்கலைக்கழகக் குழுவிற்கு' 2018ஆம் ஆண்டு பயனுள்ள ஆண்டாகும். இந்த ஆண்டில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் நாம் குறிப்பிடத் தக்க மற்றும் அங்கீகரிக்கத் தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம். 'தானுவாஸ் பல்கலைக்கழகக் குழு' எப்போதும் முன்னணியில் இருப்பதையே வழக்கமாக்கிக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகம் ஏற்படுத்திய பர்கூர் மாட்டின



ஆராய்ச்சி நிலையம், நாட்டின மாடுகளைப் பாதுகாத்தலுக்காக மத்திய அரசின் வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் உயரிய காமதேனு விருது பெற்றுள்ளது. அண்மையில் பல்கலைக்கழகம் நாட்டிலேயே முதலாவதாகக் "கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பு" என்பதை நிறுவியுள்ளது. இதன் நோக்கம் கால்நடை மருத்துவ அறிவியல், உயிர் அறிவியல் மற்றும் பிற தொழில்நுட்பப் புலங்களில் மாணவர்கள் மற்றும் தொழில்கல்வி கற்றவர்களை ஈடுபடச் செய்வதாகும். மேலும், நமது பல்கலைக்கழகம் 72 மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 3 கல்வி நிலையங்களுடன் போட்டியிட்டு, கல்வி நிலைய வளர்ச்சித் திட்டமான இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியாக ரூபாய் 28.00 கோடியைப் பெற்றிருக்கிறது. இந்நிதி எந்நேரத்திலும் கற்றல், பாடம்சார்ந்த திறன்கள் மற்றும் மென்திறன்கள் கற்றுக்கொள்ளல் மூலம் மாணவர் மேம்பாடு, தேசிய மற்றும் பன்னாட்டுப் பயிற்சிகள் மூலம் ஆசிரியர் மேம்பாடு மற்றும் பிற செயல்பாடுகள் ஆகியவற்றை உருவாக்க உதவும். இதோடு காங்கேயம் மற்றும் புலிக்குளம் மாடுகளின் பாதுகாப்பிற்காக முறையே ஈரோடு மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் இரு ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது; சேலம் கருப்பு ஆட்டை இனமாகப் பதிவு செய்து அதற்கான இனப் பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ளது; நோய்த் தடுப்புத் தன்மையும் உள்ளூர் வேளாண் பருவ நிலைக்கு ஏற்றதுமாக "தானுவாஸ் கேபிஎம் கோல்டு" எனும் புதிய கலப்பின வெண்பன்றியை உருவாக்கியுள்ளது; ஆதாரச் செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருத்துவத்திற்கு ஜிஎம்பி வசதி பெற்றுள்ளது; நாயின பர்வோ நச்சுயிரி மற்றும் பூனையின பான்லூகோபீனியா நச்சுயிரிகளின் முழு மரபணுவை வரிசைப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு அரசு நமது பல்கலைக்கழகம் மூலம் விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள் ஆகியோரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகச் சுய நிதியும், தருமபுரி மாவட்டம் பென்னகரத்தில் ஆலம்பாடி மாட்டின இனப்பெருக்க ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தல் உள்ளிட்ட 8 ஆராய்ச்சித் திட்டங்களுக்காக ரூபாய் 1,582.86 இலட்ச நிதியுதவியும் அளித்துள்ளது.

கல்வி, ஆராய்ச்சி, பண்ணையாளர் / உழவர் சேவை ஆகியவையே பல்கலைக்கழகத்தின் முதன்மையான நோக்கங்களாகும். அந்த வகையில் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் விழுப்புரம் மாவட்டம், சின்னசேலத்தில் புதிய வேளாண் அறிவியல் நிலையம் ஏற்படுத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அனுமதி அளித்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்கலைக்கழகத்திற்கும் வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டது. அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் பயிற்சி முகாம்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கிராமங்களின் மேலான வளர்ச்சிக்குச் சிறப்புக் கவனம் அளிக்கும் வகையில் 31 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் "கிராமத் தத்தெடுப்புத் திட்டம்" பல்கலைக்கழகம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகம் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தின் ஆறு கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் "விவசாயிக்கு முதலிடம்" எனும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சிறப்புத் திட்டத்தால் வேளாண், தோட்டக்கலை, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் வருவாய் 60 விழுக்காடு அதிகரித்துள்ளது.

உலகத் தரத்திற்கு இணையாகக் கால்நடை மருத்துவச் சிகிச்சை சேவைகளைப் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. கால்நடை மருத்துவச் சேவையில் ஒரு குறிப்பிடத் தக்க சாதனையாகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் கணினி வரைபட நுண்ணொளி அலகீட்டுப் பரிசோதனைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் நான்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ள பயிற்சிக் கால்நடை மருத்துவச் சிகிச்சை வளாகம், மாதவரத்தில் உள்ள புறநகர் கால்நடை மருத்துவமனை ஆகியவற்றில் நுண்ஒலி அலை வரைபடம்

(அல்ட்ராசோனோகிராபி), உள்நோக்குக் கருவி (எண்டோ ஸ்கோபி), இதயத் துடிப்பலைப் பதிவுக்கருவி (இசிஜி), எலும்பு முறிவுச் சிகிச்சை, ஹிமோடயாலிசிஸ், கண்மருத்துவச் சிகிச்சை, தோல் நோய்ச் சிகிச்சை, நாய்களுக்கான இரத்த வங்கி ஆகிய உயர் சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது பல்கலைக்கழகம் செயல்படுத்திவரும் மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கிவைத்த "கிராமப்புறக் கால்நடை மருத்துவத்திற்கான நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தித்(அம்மா)" திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. கால்நடைகளில் மருத்துவம், அறுவை மற்றும் பேறு கால நிலைமைகளை அறிவதற்கான வசதிகளுடன் கூடிய தானியங்கி மின்தூக்கி கொண்ட பத்து நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் பண்ணையாளர்களின் இல்லங்களுக்கே சென்று நோயுற்ற கால்நடைகளை மருத்துவமனைக்குக் கொண்டுவந்து உயர்வகை மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுக் காஞ்சிபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

புத்தாண்டு 2019 பிறந்திருக்கிற இவ்வேளையில் இப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் "தானுவாஸ் பல்கலைக்கழகக் குழுவில்" இணைந்து மிகவும் சிறந்த வழியில் வேளாண் சமூகத்தினருக்குப் பணியாற்ற கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக்கழகக் குழுவின் சார்பாக மீண்டும் உங்கள் அனைவருக்கும் **என் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத்** தெரிவித்துக் கொண்டு, பல்கலைக்கழகக் குழுவிற்கு எப்பொழுதும் "விவசாயிகள் முதலிடம்" என்பதைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்களுக்கு உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலான வாழ்த்துகளுடன்
**முனைவர் சி. பாலச்சந்திரன்**
துணைவேந்தர்

## நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றிய தேசியக் கருத்தரங்கு



சென்னை, கோழியின ஆராய்ச்சி நிலையம் மூலம் "நாட்டுக்கோழி வளர்ப்பு: உலக வெப்பமயமாதல் சூழலில் பாதுகாத்தல், உற்பத்தி மேம்பாடு மற்றும் வணிகமயமாக்கம்" பற்றிய தேசியக்கருத்தரங்கு, சென்னைக்கால்நடை மருத்துவக்கல்லூரியில் 19.12.2018 மற்றும் 20.12.2018ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கருத்தரங்கை மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் துவக்கிவைத்து, பண்ணையாளர்களுக்கு இடுபொருள்களையும் சிறந்த கோழிகளுக்குப் பரிசுகளையும் வழங்கி, பண்ணையாளர் கையேடு மற்றும் கருத்தரங்க நினைவு மலர் வெளியிட்டார். அவர் தமது துவக்கவுரையில் ஏழை மக்களின் வறுமையை ஒழிக்கவும் அவர்களின் நீடித்த வாழ்வாதாரத்திற்கும் தமிழ்நாடு அரசு துவக்கியுள்ள கோழி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தலைமையுரை ஆற்றிய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ள பயனீட்டாளர் நோக்கில், பொருளாதார ரீதியில் விலை குறைவான தொழில்நுட்பங்கள் மற்றும் நந்தனம் கோழி II, III மற்றும் IV, நாமக்கல் கோழி I, இரத்தக் கழிச்சல் நோய்க்கு எதிரான வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து, பண்ணைக் கருவிகள் ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். கருத்தரங்க அமைப்புத் தலைவர் மற்றும் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார், கருத்தரங்க அமைப்புத் துணைத் தலைவர் மற்றும் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் கே. மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்க அமைப்புச் செயலாளர் மற்றும் கோழியின ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.வி. ஓம்பிரகாஷ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பேராசிரியர் முனைவர் சு. எழில்வளவன் அவர்கள் நன்றி கூறினார். பல்வேறு நாட்டுக்கோழிகள், தொழில்நுட்பங்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டன. 20.12.2018அன்று நடைபெற்ற கருத்தரங்க நிறைவு விழாவில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழையும் சிறந்த கட்டுரையாளர் விருதுகளையும் வழங்கி நிறைவுரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்கில் 99 அறிவியல் அறிஞர்கள் மற்றும் 119 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

## தேசியக் கருத்தரங்கு மற்றும் பயிலரங்கு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறை மூலம் "செல்லப்பிராணிகள் மூலம் பரவும் ஒட்டுண்ணி நோய்களைக் கண்டறிதல்" எனும் தேசியக் கருத்தரங்கு மற்றும் பயிலரங்கு 18.12.2018 மற்றும் 19.12.2018ஆம் தேதிகளில் நடைபெற்றது. கருத்தரங்கினைக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ. தினகர் ராஜ் அவர்கள் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளத்தின் திட்ட இயக்குநர் முனைவர் மு. இராமன் அவர்கள் பங்கேற்றார். கருத்தரங்கின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, செல்லப்பிராணிகளில் ஏற்படும் ஒட்டுண்ணி நோய்களைச் சரியான நேரத்தில் கண்டறிதலின் முக்கியத்துவத்தைத் தமது நிறைவுரையில் வலியுறுத்தினார். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை

வழங்கினார். கருத்தரங்கின் அமைப்புச் செயலர் மற்றும் பேராசிரியர் முனைவர் ஆ. சங்கரன் நன்றியுரை ஆற்றினார். பயிலரங்கில் 25 பேர் பங்கேற்றனர்.

### ஆண்டு ஆய்வுக் கூட்டம்



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கால்நடைகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவத் திட்டத்தின் ஆண்டு ஆய்வுக் கூட்டம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 10.12.2018 அன்று நடைபெற்றது. புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர் (கால்நடை நலம்) முனைவர் அசோக்குமார் அவர்கள் திட்டச் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். கூட்டத்திற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ. தினகர் ராஜ் அவர்கள் புதிய பொருள்கள் உற்பத்தி மற்றும் காப்புரிமை பற்றி விரிவுரை ஆற்றினார். பேராசிரியர் மற்றும் திட்ட முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் வ. ரங்கநாதன் நன்றியுரை வழங்கினார்.

### கோடைக்காலப் பயிற்சி



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியல் துறைமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியில் "பறவையின நச்சுயிரிகளின் அணுத்திரள் நோய் உருவாக்கத்தில் பின்னோக்கிய மரபியல் மற்றும் குறியீடு பதித்தல்" எனும் 21 நாள் கோடைக்காலப் பயிற்சி, 28.11.2018 முதல் 18.12.2018 வரை நடைபெற்றது. பல்கலைக்கழகம் சார்ந்த வள அறிஞர்கள் மற்றும் பாட வல்லுநர்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிலையங்கள் மற்றும் தொழில்துறை சார்ந்த எட்டுச் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் விரிவுரை வழங்கினர். பயிற்சியில் விரிவுரைகள் மற்றும் செய்முறைப் பயிற்சிகள் இடம்பெற்றன. பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்றுத் தலைமையுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் பயிற்சி குறித்து விரிவான அறிக்கை அளித்தார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ. தினகர் ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 22 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

### உழவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி



விழுப்புரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் "இலாபகரமான நாட்டுக்கோழி வளர்ப்பு" எனும் உழவர்க்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 21.12.2018 அன்று நடைபெற்றது. பயிற்சியை விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் துவக்கி வைத்தார். ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ.ஹரிகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பயிற்சியில் 117 விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### பயிற்சி

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின உயர்கல்வி மையத்தில் "கோழியில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களின் உணவியல் மதிப்பு மற்றும் விற்பனை வழிமுறைகளை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப அணுகுமுறைகள்" எனும் தேசிய அளவிலான 21 நாள் பயிற்சி, 28.11.2018 முதல் 18.12.2018 வரை நடைபெற்றது. பயிற்சியில் கேரளா, இராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்திர பிரதேசத்தைச் சார்ந்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிலையங்கள் மற்றும் மாநிலக் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களின் அறிவியலாளர் / உதவிப் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.
- நாமக்கல், கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நுண்ணுயிரியல் துறைமூலம் "விலங்கினத் திசு வளர்ப்புப்" பயிற்சி, சேலம் ஸ்ரீசக்தி கைலாஷ் மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கு 28.11.2018 மற்றும் 29.11.2018 ஆம் தேதிகளில் அளிக்கப்பட்டது.
- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது நபார்டு வங்கி நிதியுதவியில் "அசோலா உற்பத்தி, கால்நடை மற்றும் கோழித் தீவனத்தில் அதன் பயன்பாடு" குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சியை 04.12.2018 முதல் 06.12.2018 வரை நடத்தியது. விரிவுரைகள், செயல்முறை விளக்கம், முன்னோடிப் பண்ணையாளர்கள் உருவாக்கிய அசோலா உற்பத்திப் பிரிவுகளைப் பார்வையிடல் ஆகியன பயிற்சியில் இடம்பெற்றன. மொத்தம் 30 விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்றனர். மேலும், இம் மையம் ஹைதராபாத் தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம், குடுமியான்மலை மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிலையம், கரூர் வேளாண் துறை ஆகியவற்றுடன் இணைந்து "வெள்ளாடு, செம்மறியாடு மற்றும் முயல் வளர்ப்பு" குறித்த கிராமப்புற இளைஞர்க்கான திறன் பயிற்சியை 13.12.2018 முதல் 20.12.2018 வரை நடத்தியது.

பயிற்சியில் 28 கிராமப்புற இளைஞர்கள் பங்கேற்றனர். கரூர் ஆத்மா திட்ட இயக்குநர் மற்றும் வேளாண் இணை இயக்குநர் திருமதி கே.பி. ஜெயந்தி, உழவர் பயிற்சி மையத்தின் வேளாண் இணை இயக்குநர் திருமதி ஆர். உமாராணி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார மையத் திட்ட இயக்குநர் திரு. கே.ஏ. சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றிப் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடினர்.

- திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் "இலாபகரமான கறவை மாட்டுப் பண்ணைக்கான இனப்பெருக்க மேலாண்மை" பற்றிய விவசாயிகளுக்கான பயிலரங்கு, துறையூரில் 11.12.2018அன்று நடத்தப்பட்டது. இதில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் இ. சையது முஸ்தபா, ஆவின், துணைப் பொது மேலாளர் திரு. ஏ.பி. நடராஜன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். 270 விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்பத் துறைமூலம் "தேசிய ஊரக மிஷன் – கறவைமாடு வளர்ப்பு / தொழில்முனைவோர் பயிற்சி" எனும் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி கூடு அறக்கட்டளையின் 34 மகளிர் பயனாளிகளுக்கு "மதிப்புக் கூட்டிய பால் பொருள்கள் தயாரிப்புப்" பயிற்சி 13.12.2018அன்று அளிக்கப்பட்டது.
- காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையம்மூலம் ஹைதராபாத் தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத்தின் நிதியுதவியில் "வெள்ளாடு வளர்ப்பு மற்றும் மேலாண்மை முறைகள்" குறித்த பயிற்சி, 17.12.2018 முதல் 22.12.2018வரை நடைபெற்றது. பயிற்சியில் 28 விவசாயிகள் பங்கேற்றனர். கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் பா. குருமூர்த்தி, வேளாண் துறையின் மண்டல இணை இயக்குநர் திருமதி கோல்டி பிரேமவதி ஆகியோர் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினர்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறை சார்பில் "கறவை மாட்டுப் பண்ணையாளர்களுக்கான முதலுதவி மருத்துவ முறைகள் மற்றும் எளிய மருந்துத் தயாரிப்புகள்" குறித்த பயிற்சி 18.02.2018அன்று நடத்தப்பட்டது. இதில் 33 கறவை மாட்டுப் பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியல் துறை நபார்டு வங்கி நிதியுதவியில் கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் "புறக்கடைக் கோழிகளில் ஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்தும் முறைகள்" குறித்த பயிற்சியை 18.12.2018 முதல் 20.12.2018 வரை நடத்தியது. பயிற்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் துவக்கிவைத்துப் பயிற்சிக் கையேடு மற்றும் மடிப்பிதழ்கள் வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். இதில் 25 விவசாயிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறை மூலம் தமிழ்நாடு அரசின் புதுமைத் திட்டத்தின்கீழ்ப் பல்கலைக்கழகப் பண்ணைகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்களுக்குக் "கால்நடைகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவம்" குறித்த பயிற்சி 21.12.2018அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் தலைமை வகித்தார். ஓய்வுபெற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் மரபுசார் கால்நடை மருத்துவத்தின் பல்வேறு பயன்பாடுகள் பற்றிச் செயல்முறை விளக்கம் அளித்தார். இதில் 20 உதவிப் பேராசிரியர்கள் பங்கேற்றனர். மேலும், ஆத்மா திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் 80 விவசாயிகளுக்கு முறையே 20.12.2018 மற்றும் 27.12.2018ஆம் தேதிகளில் கால்நடைகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.
- பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநரகமும் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையமும் இணைந்து பன்னாட்டு அணுசக்தி முகமையின் நிதியுதவியில் "ஒருங்கிணைந்த பயிர், கால்நடை வளர்ப்பு மற்றும் கறவைமாடு வளர்ப்போருக்கான கால்நடைப் பல்கலைக்கழகத் தொழில்நுட்பங்கள்" குறித்த பயிற்சியைச் சத்தியமங்கலத்தில் 04.01.2019அன்று நடத்தின. ஈரோடு மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் ந. குழந்தைசாமி, கோபி சரகம், கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் சு. விஷ்ணுகந்தன், ஈரோடு, கால்நடை இனப்பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் துணை இயக்குநர் மருத்துவர் சு. கோபால்சாமி ஆகியோர் பயிற்சியில் பங்கேற்று உரையாற்றினர். மொத்தம் 88 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

## செம்மறியாடு வழங்கல்



கிருஷ்ணகிரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் "செம்மறியாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள்" எனும் நபார்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 28.12.2018அன்று 25 விவசாயிகளுக்குச் செம்மறியாட்டுக் கிடா, செம்மறியாட்டுத் தீவனம், அசோலா இடுபொருள்கள் ஆகியவை வழங்கப்பட்டன. கிருஷ்ணகிரி, நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திருமதி நஸ்ரின் சலீம் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார்.

## தேசிய உழவர் தினம்




கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் கரூர், வேளாண் அறிவியல்

நிலையமும் இணைந்து தேசிய உழவர் தினத்தை 24.12.2018அன்று கொண்டாடின. ஆத்மா திட்ட இயக்குநர் திருமதி கே.பி. ஜெயந்தி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் எஸ். இளங்கோவன் மற்றும் உதவி இயக்குநர் மருத்துவர் என். நடராஜன், வேளாண் அறிவியல் நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ஜெ. திரவியம், நபார்டு வங்கியின் உதவி பொதுப் மேலாளர் திரு. எம். பரமேஸ்குமார், கொடைக்கானல், மத்திய செம்மறியாடு மற்றும் கம்பளி ஆராய்ச்சி மையத்தின் தென்மண்டல ஆராய்ச்சி மைய விஞ்ஞானி முனைவர் கே. பச்சையப்பன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் 105 விவசாயிகள் பங்கேற்றனர்.

### நோய் கண்டறிதல் ஆய்வகம் – திறப்பு விழா

தமிழ்நாடு மாநில அரசின் நிதியுதவி மூலம் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கால்நடை மருத்துவம்சார் துறைகள் மற்றும் காவேரிப் பாசன மாவட்ட விவசாயிகளின் பயன்பாட்டிற்காகக் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக நோய் கண்டறிதல் ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் 02.01.2019 அன்று திறந்துவைத்தார்.

### தேசியப் பயிற்சி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நூலகம் மூலம் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்டத்தின்கீழ் "ஒருங்கிணைந்த நூலக முறை 'கோஹா' நடைமுறைப்படுத்தம் மற்றும் பயனீட்டாளர் நோக்கில் இடைமுகம் உருவாக்கம் – இணையவழிப் பொது அணுகல் பட்டியல்" குறித்து மாநில வேளாண் பல்கலைக்கழகங்களின் நூலகர்களுக்கு இரு நாள் தேசியப் பயிற்சி, திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் 14.12.2018 மற்றும் 15.12.2018ஆம் தேதிகளில் நடைபெற்றது. இதில் ஆந்திர பிரதேசம், கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் உத்திரப் பிரதேசத்தைச் சார்ந்த 12 வேளாண் பல்கலைக்கழகங்களின் 40 நூலகர்கள் பங்கேற்றனர். புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் முனைவர் ராம்பாபு சர்மா, திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஒய். ஹரி பாபு, முனைவர் ஜி. இரத்தினசபாபதி, திட்ட முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் பேராசிரியர் ஜெயசங்கர் தெலுங்கானா மாநில வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் நூலகர் முனைவர் கே. வீராஞ்சநேயலு, இசாட்நகர், இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் முனைவர் கே.என். கந்த்பால் ஆகியோர் பயிற்சியில் பங்கேற்றனர்.

### மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் பார்வையிடல்



மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி ஆகியோர் 10.12.2018அன்று ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிக்கு வருகை தந்து, கோழிப் பண்ணை வளாகச் செயல்பாடுகளைப் பார்வையிட்டுக் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினர். இந்நிகழ்வில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் எஸ். பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

### டாக்டர் பி. ரிச்சர்டு மாசிலாமணி பேருரையாளர் விருது 2018




பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், இந்தியக் கால்நடை நோய்த்தடுப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கத்தின் 2018ஆம் ஆண்டிற்கான பெருமைமிகு டாக்டர் பி. ரிச்சர்டு மாசிலாமணி பேருரையாளர் விருது அளித்துச் சிறப்பிக்கப்பட்டார். 13.12.2018 மற்றும் 15.12.2018ஆம் தேதிகளில் நாகலாந்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மிதுன் தேசிய ஆராய்ச்சிக் கழகத்தில் நடைபெற்ற இந்தியக் கால்நடை நோய்த்தடுப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டுக் கூட்டம் மற்றும் "கால்நடை நலம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தப் புதுமையான உயிர்த் தொழில்நுட்ப அணுகுமுறைகள்" பற்றிய தேசியக் கருத்தரங்கு விப்கான் 2018இல் துணைவேந்தர் அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது. விருதினை மாண்புமிகு நாகலாந்து மாநில ஆளுநர் திரு. பி.பி. ஆச்சார்யா அவர்கள் வழங்கினார். பேருரை "கால்நடை மருத்துவத்தின் முக்கோணப் பரிமாற்றம்: நானோ–, இம்னோ– மற்றும் உயிர்த் தொழில்நுட்பங்கள்" என்பதாகும்.

### விருது

பல்கலைக்கழகத்தின் கோழியின ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.வி. ஓம்பிரகாஷ் அவர்கள், கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் 2015ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அறிவியலாளர் விருதினை 27.12.2018அன்று பெற்றார்.

### சிறப்பு விரிவுரை

★ ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 200 மாணவர்களுக்கு, "மருத்துவ ஆராய்ச்சியிலும் அதற்கு வெளியிலும் ஒரு கால்நடை மருத்துவரின் துணிகரமான செயல்" எனும் சிறப்பு விரிவுரை, கலிபோர்னியா தேசிய குரங்கின ஆராய்ச்சி நிலைய நச்சுயிரியியலாளர் முனைவர் கோயன். கே. வான் ரோம்பே அவர்களால் 03.01.2019அன்று வழங்கப்பட்டது.

★ நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 19 இளநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் 4

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020**
**REGISTERED No.TN/CC(S)DN/569/18-20**

Posted on 31.01.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு, “வன விலங்குகளில் ஏற்படும் நோய்கள் மற்றும் நடைமுறை நோய் மேலாண்மை உத்திகள்” பற்றிய சிறப்பு விரிவுரை, சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் வனத் துறைக் கால்நடை மருத்துவர் கிருஷ் அசோகன் அவர்களால் 27.12.2018 அன்று வழங்கப்பட்டது.

### வெள்ளை அங்கி வழங்கும் விழா

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு மாணவர்களுக்கு வெள்ளை அங்கி வழங்கும் விழா 18.12.2018அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். பட்டயக் கணக்கர் மற்றும் பல்கலைக்கழகத்தின் மருத்துவமனை மேலாண்மைக் குழு உறுப்பினர் திரு. எல். விஜயன், நாமக்கல் கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் வி.பி. பொன்னுவேல் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினர்.

### சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தேசிய மாணவர் படைப் பிரிவுமூலம் ‘கஜா’ புயலால் பாதிக்கப்பட்ட ஒரத்தநாடு தாலுக்காவின் பூவத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொட்டலங்குடிகாடு கிராமத்தில் சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம் 18.12.2018அன்று நடத்தப்பட்டது. முகாமிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் தலைமை வகித்து, உரையாற்றினார். தஞ்சாவூர், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் இ. தனபாலன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 766 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### தூய்மை இந்தியா நிகழ்ச்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தூய்மை இந்தியா இயக்கத்தின் செயல்பாடுகள் பற்றிய நிகழ்ச்சி 28.12.2018அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் துவக்கிவைத்தார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தேசிய அளவில் தூய்மை இந்தியா இயக்கப் பரிசுபெற்ற புதுச்சேரி மாநிலம், கூனிச்சாம்பட்டி பாவேந்தர் பாரதிதாசன் அரசினர் துவக்கப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. எஸ். சசிகுமார் மற்றும் சேந்தநத்தம் அரசினர் துவக்கப்பள்ளித் தலைமையாசிரியை திருமதி ஆர். செல்வி ஆகியோர் தங்களது மாணவர் பிரதிநிதிகளுடன் நிகழ்ச்சியில் பங்கேற்று, அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சியில் ஆர்வமுடன் பங்கேற்ற ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கல்லூரி வளாகங்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளைத் தூய்மைப்படுத்தினர்.

### பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கவியல் துறையின் உடனாள் திரு. பி. பாஸ்கரன் அவர்கள் 31.12.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 24.12.1958இல் பிறந்த இவர், 23 ஆண்டும் 08 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உணவியல் துறையின் உடனாள் திரு. பி. வீரசிங்கம் அவர்கள் 31.12.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 02.12.1958இல் பிறந்த இவர், 24 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



மாதவரம் பால்பண்ணை, கோழியின ஆராய்ச்சி நிலையத்தின் அடிப்படை ஊழியர் திரு. வி. வாசு அவர்கள் 31.12.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 13.12.1958இல் பிறந்த இவர், 06 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா